பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 24 திங்கட்கிழமை (09-11-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 347

நூலகம் நாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

# மட்டக்களப்புக் காட்டுப் பகுதிகளில் இராணுவ நடவடிக்கை ஆரம்பம்!

## பெருமளவு துருப்புகள் களத்தில்

கொழும்பு, நவம்பர் 9

மட்டக்களப்புக் காட்டுப் பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஸ்ரீலங்காப் படைகள் நேற்று ஆரம்பித்திருப்பதாகவும் பெரும் எண்ணிக்கையான துருப்புகள் களத்தில் குதித்திருப்பதாகவும் கொழும்பில் தகவல் வெளியிடப்பட்டது.

நேற்று அதிகாலை 5 மணிக்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊரடங்கு உத்தரவு அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து— அங்குள்ள எல்லைப் பிரதேசக் காட்டுப் பகுதிகளில் பெரும் எடுப்பிலான தாக்குதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதாக கொழும்பில்

[6ஆம் பக்கம் பார்க்க]

## தயார் நிலையில் விமானங்கள்

கொழும்பு, நவ. 9

மட்டக்களப்புக் காட்டுப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அடுத்து, கிழக்கில் உள்ள விமானத் தளங்களில் குண்டு வீச்சு விமானங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. காட்டுப் பகுதியில் தாக்குதலில் ஈடுபடும் படையினருக்கு உதவியாக எந்நேரமும் குண்டு வீச்சை நடத்த தயாராக விமானங்கள் வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. [உ-3]

## ஹெலி நோட்டம்

யாழ்ப்பாணம், நவ. 9

வலி - வடக்கு, வலி - தெற்குப் பகுதிகளை நேற்று முற்பகல் 11 மணியளவில் இரண்டு ஹெலிகள் வட்டமிட்டு நோட்டமிட்டன.

நீர்வேலி மற்றும் தெல்லிப்பளை, ஏழாலை, மல்லாகம் பகுதிகளை மையமாகக் கொண்டே ஹெலிகள் வட்டமிட்டன.

இதே வேளை குடாநாட்டில் நேற்று விமானங்களும் அடிக்கடி பறந்து திரிந்ததை அவதானிக்க முடிந்தது.

## சில பிரதேசங்களில் தொடர்ந்து ஊரடங்கு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுக்காலை 5 மணிக்கு அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று இரவு 11.30 மணி முதல் பெரும்பாலான பகுதிகளில் நீக்கப்படுவதாக இருந்தது.

கூட்டுப்படைகள் தலைமைப் பீடம் நேற்று இத்தகவலை வெளியிட்டது.

சில உதவி அரச அதிபர் பிரிவுகளிலும் மற்றும் சில இடங்களிலும் மட்டுமே ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்து அமுல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

ஏறாவூர்ப்பற்று, செங்கலடி, மண்முனை வடக்கு, போரதீவுப்பற்று, வெல்லாவெளி, மண்முனை தென்மேற்கு, பட்டிப்பளை, மண்முனை மேற்கு, வவுணதீவு ஆகிய பகுதிகளிலேயே ஊரடங்கு தொடர்ந்தும் அமுல் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது. [உ-எ-3]

## முஸ்லிம்களை ஏமாற்றும் நடவடிக்கையே இது!

லண்டன், நவ. 9

கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை முஸ்லிம் மக்களை ஏமாற்றும் ஒரு நடவடிக்கையே — என்று ஏஜென்சிச் செய்திகள் தகவல் வெளியிட்டுள்ளன.

கிழக்கில் குறிப்பாக முஸ்லிம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளனர் என்று முஸ்லிம் தலைவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த மாதம் பொலன்னறுவை மாவட்டத்தில் ஒரே இரவில் நான்கு கிராமங்களை சேர்ந்த சுமார் 170 முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்

[6ஆம் பக்கம் பார்க்க]

## குவாக்கர் சமாதான அமைப்பின் மூன்று பிரதிநிதிகள் யாழ். வருகை

யாழ்ப்பாணம், நவ. 9

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் சர்வதேச தொண்டர் நிறுவனமான "குவாக்கர் பீஸ்" அமைப்பின் மூன்று பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

இந்த அமைப்பின் அமெரிக்கப் பிரதிநிதிகளான திரு. பில் எட்மண்ட், திரு. றொபேர்ட் நெவில் காண்ட் ஆகியோரும், இந்தியாவைச் சேர்ந்த என். ராமமூர்த்தியுமே இங்கு வந்திருக்கின்றனர்.

விமானமூலம், பலாலி வந்து சேர்ந்த அவர்கள் காங்கேசன் துறையிலிருந்து 'குமண' கப்பல் மூலமாக பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்கள் நேற்று யாழ். மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசியதாகவும்—

இன்று விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சமாதானத் தீர்வை எட்டுவதற்கான முயற்சியாக இந்த அமைப்பின் பிரதிநிதிகள் ஏற்கனவே, சில தடவைகள் யாழ்ப்பாணம் வந்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-3]

## பெருமளவு ஆயுதங்கள் புலிகள் தருவிப்பு!

பெருமளவு நவீன ஆயுதங்களையும் வெடிப் பொருள்களையும் விடுதலைப் புலிகள் யாழ். குடா நாட்டுக்குள் கொண்டு வந்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கும் தகவல்களை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில வார இதழான "சண்டே டைம்ஸ்" இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன்னர் பருத்தித்துறைக் கடற் பகுதி ஊடாக படகுகளில் இந்த ஆயுதங்கள் கொண்டு வந்து இறக்கப்பட்டன என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## டி.பி. விஜேதுங்காவுக்கு விரைவில் கல்தா?

பிரதமரும், நிதியமைச்சருமான டி. பி. விஜேதுங்கா விரைவில் அப்பதவியிலிருந்து நீக்கப்படலாம் என கொழும்பில் பேசப்படுவதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

அடுத்த சில தினங்களில் நாடு திரும்பவிருக்கும் முன்னாள் நிதியமைச்சரான றொனி டி மெல்லுக்கு மீண்டும் நிதியமைச்சர் பதவி வழங்கப்படும் என்றும் —

அதற்கு வசதியாக டி. பி. விஜேதுங்காவை வெளிநாடு ஒன்றுக்கு இலங்கையின் தூதுவராக நியமிப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது. [உ-6]

## றொனியின் வருகையை ரணில் எதிர்க்கிறார்!

கொழும்பு, நவ. 9

லண்டனிலிருந்து அடுத்த சில தினங்களில் நாடு திரும்பும் முன்னாள் அமைச்சரான றொனி டி மெல்லுக்கு, நிதி அமைச்சர் போன்ற முக்கிய பதவி வழங்கப்படுவதை கைத்தொழில், விஞ்ஞான அமைச்சரும், அரசாங்கக் கட்சியின் பிரதம கொறடாவுமான ரணில் விக்கிரமசிங்க கடுமையாக எதிர்த்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு எதிரான குற்றவிசாரணைப் பிரேரணை கொண்டு வரப்பட்ட போது, ஜனாதிபதிக்கு ஆதரவாகச் செயற்பட்டு, ஆளும் ஐக்கிய தேசிய கட்சியில் முக்கிய இடத்தை — பிரேமதாஸாவுக்கு அடுத்த இடத்தை — பிடித்திருக்கும் ரணில் விக்கிரமசிங்க —

மீண்டும் கட்சிக்குள் றொனி டி மெல் சேர்க்கப்பட்டால் தமது இரண்டாம் வரிசைத் தலைமையை இழக்கலாம் என்று அஞ்சுவதாகவும் —

அதனாலேயே றொனிக்கு இடமளிப்பதை அவர் கடுமையாக எதிர்ப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது. [உ-6]

## கைதிகள் சேமித்த உணவை தட்டிப் பறித்த அதிகாரிகள்!

வெலவத்த தடுப்பு முகாம் கைதிகள் உண்ணாவிரதம் இருந்த சமயத்தில், தாம் சேமித்து வைத்திருந்த உலர் உணவு வகைகளை வடக்கு-கிழக்கு அகதிகளுக்கு அனுப்பத் தீர்மானித்திருந்தனராம்.

ஆனால் அவர்கள் இவ்வாறு சேமித்து வைத்திருந்த 13 சாக்கு அரிசி மற்றும் பொருள்கள் அடங்கிய சாக்குகளை முகாம் அதிகாரிகள் கைப்பற்றி விட்டனர் என்று பி. பி. ஸி. செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கைதி ஒருவர் பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு கடிதம் எழுதியிருப்பதாகவும் அந்தச்செய்தியில் கூறப்பட்டது. [ஓ-6]

## பலாங்கொடை வங்கியில் கொள்ளை

பலாங்கொடையில் உள்ள வங்கி ஒன்றில் இருந்து 50 லட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டது. எனினும் கொள்ளையர்கள் இருவரும் பின்னர் பிடிக்கப்பட்டதால் 35 லட்சம் ரூபா அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டது.

போக்குவரத்துச் சபை பஸ் ஒன்றில் கொள்ளையர் பயணம் செய்தபோது ஒப்பநாயக்காவில் வைத்து அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். [வ]

வீடும் வாழ்வும் காடு வளர்ந்தாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா வரும் லொறிகள்: சோதனை முறை மாற்றம்

யாழ்ப்பாணம், நவ. 9

வவுனியாவுக்கு வடக்கே வரும் லொறிகளுக்கான சோதனை நடைமுறையில் படையினர் மாற்றங்கள் செய்துள்ளதாகத் தெரிய வந்தது.

கொழும்பில் இருந்து வரும் லொறிகள், வவுனியா எல்லையில் — ஈரப்பெரியகுளம் முகாம் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு இதுவரை காலமும் சோதனையிடப்பட்டு வந்தன.

கடந்த வாரம் முதல் கொழும்பில் இருந்து வரும் லொறிகள் மதவாச்சியிலேயே நிறுத்தப்பட்டு வருவதாகவும்-

கொழும்பிலிருந்து லொறியில் இருக்கும் பொருட்கள் பற்றிய விவரம் அடங்கிய "பக்ஸ்" மூலமான தகவல் ஈரப்பெரியகுளம் முகாமுக்கு கிடைத்த பின்னரே சோதனைக்காக, லொறிகள் அழைக்கப்படுவதாகவும் —

இதனால் லொறிச் சாரதிகளும், கிளீனர்களும் பெரும் அச்சத்துடன் மதவாச்சியில் தங்கவேண்டியுள்ளதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் —

நிவாரணப் பொருட்கள் கொண்டுவரும் லொறிகளும் இந்த நடைமுறைக்கு உள்ளாக்கப்படுவதை தொண்டர் நிறுவனங்கள் ஆட்சேபித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-8)

## நாளை

மயிலணி, நவ. 9

சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலய தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் நாளை காலை 9 மணியளவில் அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக ஓய்வு கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பங்கு பற்றுவார். (உ-81)

## இன்று

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ்ப்பாணம் கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீட வேதாந்தமடம் பூரணை தினம்தோறும் நடத்தி வரும் சொற்பொழிவுத் தொடரில் இன்று "மூவர் தமிழ்" என்ற தலைப்பில் வித்துவான் சைவப் புலவர் இ. திருநாவுக்கரசு உரை நிகழ்த்துவார்.

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு வேதாந்த மடத்தில் இந் நிகழ்ச்சி நடைபெறும்.

* * *

யாழ்ப்பாணம், நவ. 9

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தமிழீழக் கல்விக் கழக பணிமனையில் நடைபெறும் என்று பேரவையின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

* * *

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் யாழ் உதவி அரச அதிபர் பிரிவில் கொழும்புத்துறையிலும் ஓர் அலுவலகம் இன்று ஆரம்பிக்கப்பட உள்ளது. யோகர் சுவாமிகளின் சமாதி அமைந்துள்ள காணியில் இந்த கிளை அலுவலகம் ஆரம்பிக்கப்படுகிறது. (அ-80)

* * *

நாயன்மார்கட்டு சிவபாலர் பாலர் பாடசாலையின் கலை விழா இன்று திங்கள் பிற்பகல் 2 மணிக்கு நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயக் கலை அரங்கில் நடைபெறுகிறது. பாலர் பாடசாலை மாணவ, மாணவிகளும், பழைய மாணவ மாணவிகளும் வில்லிசை, பரத நாட்டியம் உட்படப் பல கலை நிகழ்ச்சிகளை வழங்குவர். (அ)

## நிவாரண விநியோகம்

யாழ்ப்பாணம் நவ. 9

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அக்டோபர் மாதத்துக்கான நான்காம் கட்ட நிவாரணம் நாளை முதல் எதிர்வரும் சனிக்கிழமை வரை வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. (உ)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ. 9

லோகேந்திரா வெற்றிக் கேடயத்துக்காக ஐடியல் கிரிக்கெட் கழகம் நடத்தும் மென்பந்துச் சுற்றுப் போட்டியின் மூன்று ஆட்டங்கள் யாழ். கனகரத்தினம் ம. ம. வி. மைதானத்தில் இன்று நடைபெறவிருக்கின்றன. அவற்றின் விவரம் வருமாறு:-

காலை 8.30 மணி:- சென்றலைட்ஸ் வி. க. எதிர் வளர்மதி வி. க.

முற்பகல் 10-30 மணி:- கொய்யாத்தோட்டம் ஐ.வி.க. எதிர் ஷப்றா வி. க.

நண்பகல் 1-30 மணி:- செயலகம் வி. க. எதிர் ஆரியாலை ஐ. வி. க. (உ-20)

## ஆண்டு - 6 அனுமதிப் பரீட்சை 16ஆம் திகதி

யாழ்ப்பாணம், நவ. 9

பிரபல்ய பாடசாலைகளில் ஆண்டு - 6 வகுப்புக்குப் புதிய மாணவர்களைச் சேர்ப்பதற்கான பொதுப் பரீட்சை இம் மாதம் 16 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் என்று கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரஸ்தாப பரீட்சை இம் மாதம் 14 ஆம் திகதி நடைபெறுவதற்கு ஏற்பாடாகி இருந்தது.

தேசிய பாடசாலைகளான யாழ். இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளினதும் அனுமதிப் பரீட்சைகள் முன்னர் அறிவிக்கப்பட்டது போல இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெறும். (அ-162)

## மூன்று பெண்களை மின்னல் தாக்கியது

வட்டுக்கோட்டை, நவ. 9

வட்டுக்கோட்டையில் கடந்த சனிக்கிழமை இடி மின்னலுடன் கடும் மழை பெய்ததாக அறிவிக்கப்படுகிறது.

மழை பெய்தபோது வயல் வேலையில் ஈடுபட்டிருந்த 3 பெண்கள் மின்னலால் தாக்குண்டு, மயக்கமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

செல்வி தருமு தங்கமணி, ராதா, திருமதி அன்னம் ஆகியோரே மின்னலால் தாக்குண்டவர்களாவர்.

## ஈழத்தமிழர் மூவர் கைது

சென்னை நகரில் இலங்கைத் தமிழர்கள் மூன்று பேரை பொலீஸார் கடந்த சனிக்கிழமை கைது செய்தனர்.

இவர்களில் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை சென்னைக்கு அருகே இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக பொலீஸாரால் தேடப்பட்டு வந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தச்சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்; 4 பேர் காயமடைந்தனர் என்பது தெரிந்ததே. (இ-எ)

# ஆனையிறவுப் பாதையைத் திறக்க எடுக்கும் முயற்சி ஒரு பொறியே!

## புலிகள் பிரமுகர் பேச்சு

வண்ணார்பண்ணை, நவ. 9

ஆனையிறவுப் பாதையை ஸ்ரீலங்கா இராணுவம் திறப்பதன் நோக்கம் யாழ். மக்கள் கஷ்டப்படுகின்றார்கள் என்ற அனுதாபத்தினால் அல்ல. யாழ். குடா மக்களை அழித்துவிடுவதற்கு அவர்கள் வைத்துள்ள பொறியே இது வாகும்.

கடந்த திங்கட்கிழமை மாலை யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற யாழ். வர்த்தகர் சங்க உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் ஒன்றில் உரையாற்றிய விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

ஆனையிறவு முகாமிலிருந்து கட்டைக்காடு இராணுவ முகாம் வரை ஏழாயிரம் துருப்பினரும் கல்முனையில் இருந்து பூநகரி வரை 4 ஆயிரம் துருப்பினரும் 'இராணுவ வேலி'களை அமைத்துள்ளனர்.

அவர்களுக்குத் தேவையான பொருட்களை இப்பாதையூடாக வருவோரிடம் இருந்து இலவசமாகப்பெற்று இராணுவச் சேவைக் குறைக்க முயற்சி எடுக்கப்படுகிறது.

அதேசமயம் ஆனையிறவு இராணுவத்தினருக்கு பொருள்கள் இலவசமாக கிடைக்கும் பட்சத்தில் கடும் மழையால் கடல்நீரேரி நிரம்பும் சமயம் 'இராணுவவேலி'யில் உள்ள இராணுவத்தினரை அப்பகுதியில் இருந்து எடுத்து வேறொரு பகுதியினூடாக யாழ். குடா மீது தாக்குதல் நடத்தவும் இராணுவம் முனையலாம். இவ்வாறான பொறியில் நாம் வீழ்ந்துவிடக் கூடாது— என்றார். (ஓ-162)

## தீர்ப்பால் மாற்றம் வருமாம்

சென்னை, நவ. 8

ராஜீவ் காந்தி கொலை வழக்கு தொடர்பான தீர்ப்பு இந்திய நாட்டின் பாதுகாப்புத் துறையில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

சிறப்பு புலனாய்வுக்குழுத் தலைவரான திரு டி. ஆர். கார்த்திகேயன் இவ்வாறு தெரிவித்தார். (இ-எ)

## சிறகு அவரை விதைகள்

யாழ்ப்பாணம், நவ 9

சிறகு அவரை விதைகளை மில்க்வைற் நிறுவனத்தினர் இலவசமாக வழங்கி வருகின்றனர். இரண்டு ரூபா முத்திரைகளை அனுப்புவோருக்குத் தபால் மூலம் சிறகு அவரை விதைகள் அனுப்பப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. (அ)

## பட்டப்பின் கல்விடிப்ளோமா கற்கை நெறி

யாழ்ப்பாணம், நவ. 9

1991—92ஆம் ஆண்டுக்கான பட்டப்பின் கல்விடிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களைப் பதிவு செய்யும் வேலைகள் இம் மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகும்.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப்பட்டியல் பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் இடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பல்கலைக்கழக பரீட்சை பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், நவ. 9

யாழ் பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட 1991ஆம் ஆண்டுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் சில வெளியாகி உள்ளன. கலை முதற் தேர்வில் 260 மாணவர்களும், வணிக முதற் தேர்வில் 129 மாணவர்களும், வணிக முகாமைத்துவத் தேர்வில் 33 மாணவர்களும், சங்கீதம் மற்றும் பரத நாட்டியத்துறை டிப்ளோமா பரீட்சையில் 101 மாணவர்களும் சித்தியடைந்துள்ளனர். (த)

# இடம்பெயர்ந்த மாணவர்களில் 45 வீதமானோர் படிப்பை நிறுத்தினர்!

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த மாணவர்களில் 45 சத வீதத்தினர் தமது கல்வியை இடைநிறுத்தியுள்ளனராம்!

தீவகத்தில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் கடந்த வருடம் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் இடம்பெயர்ந்தனர். —

இடம்பெயர்ந்த மாணவர்கள் யாழ் நகரப் பகுதியில் உள்ள பாடசாலைகள் உட்பட அவ்வப் பகுதிப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். —

எனினும் அவர்களில் 45 சத வீதத்தினர் படிப்பை இடைநிறுத்தியுள்ளனர் என்பது ஆய்வு மதிப்பீடுகளில் இருந்து தெரியவந்துள்ளது—

இவ்வாறு அவர்கள் தமது கல்வியை இடைநிறுத்தி பாடசாலைகளுக்குச் சமூகமளிக்காதிருப்பதற்கு வறுமையே காரணம் என நம்பப்படுகிறது —

— இத் தகவல்கள் யாழ். நாவலர் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றின் போது வெளியிடப்பட்டன.

மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் இத்தரவுகளை தமது பேச்சின் மத்தியில் கவலையுடன் தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கான மேற்படி கருத்தரங்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்றது. (அ-126)

# இதயத்தை வேகவைக்கும் 45 ஆவது நாள் கண்ணீர் அஞ்சலி

(09 - 11 - 1992)

மலர்வு: 15 — 11 — 1911



உதிர்வு: 26 — 09 — 1992

அமரர்

## கார்த்திகேசு சரவணமுத்து

(புங்குடுதீவு - 5)

எங்கள் குலவிளக்கே!

பெற்று வளர்த்துப் பெயரிட்டுப் பேணிக்காத்த தாங்கள் சந்தர்ப்பஞ் சூழ்நிலையாலும் - தீவினையின் கொடுமையினாலும் - எதிரியின் பிடியுள்அகப்பட்ட எமது பூமியிற் சிக்கிக் கொண்டீர்கள், தங்களை விடுவிக்க அல்லது தங்களுடன் எங்களைச் சேர்க்க நாங்கள் பல்வேறு விதங்களிற் பகீரதப்பிரயத்தனங்கள் செய்து தோல்வியுற்றமையைத் தங்களாத்மாவாவது நிச்சயம் புரிந்து கொள்ளுமென்று நம்புகின்றோம்.

தவிர்க்க முடியாத விதியின் தடையினால் எங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாமற் போனதை எண்ணிக் காலமுள்ள நாளெல்லாம் கண்ணீர் வடிப்போம்.

தங்களாத்மா பேரா இயற்கைப் பெரும்பேறெய்த ஐங்கரன் தாளிணைகளை மன்றாடுகின்றோம்.

எமது இதய தெய்வத்தின் 45 ஆவது நாள் நினைவு அஞ்சலிவைபவத்தில் பங்கு கொள்ளுமாறு அன்புள்ளம் கொண்ட அனைவரையும் பணிவுடன் வேண்டி நிற்கும்:

அமரரின்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சகோதரர்கள்.

82, கொழும்புத்துறை றோட், யாழ்ப்பாணம்.

புங்குடுதீவு-5

(23200)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இலை நூலகம் ... யாழ்ப்பாணம்

ப. நோ. கூ. சங்கங்களில்

# பாவனைப்பொருள்களுக்கு புதிய விலைகள் நிர்ணயம்

யாழ்ப்பாணம், நவ. 9

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொழும்பிலிருந்து லொறிகள் மூலம் கொண்டு வரும் பாவனைப் பொருள்களுக்கு விற்பனை விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

பாவனையாளர்களின் நன்மை கருதி, இடத்துக்கு இடம் விலைகளில் வேறுபாடு இல்லாமல் தவிர்க்கும் பொருட்டு புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகச் சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட விலை நிர்ணயக் குழுவினால் கடந்த வியாழக்கிழமை புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டன.

புதிய விலை விபரம் வருமாறு:-

நாட்டரிசி [கிலோ] - 28 ரூபா, தீட்டிய பச்சை அரிசி [கிலோ] - 28 ரூபா, உடைத்த பச்சை அரிசி [கிலோ] - 27 ரூபா.

சீனி [கிலோ] - 35 ரூபா, லக்ஸ்பிறே - 72 ரூபா, நெஸ்பிறே - 64 ரூபா, அங்கர் - 65 ரூபா.

உழுந்து (கிலோ) - 45ரூபா, பயறு (கிலோ] - 28 ரூபா.

ம. எண்ணெய் (லீற்றர்)-40 ரூபா, தே. எண்ணெய் (லீற்றர்) - 55 ரூபா.

மல்லி [இல. 1) கிலோ - 65 ரூபா.

சன்லைற் - 8 ரூபா 50 சதம் லக்ஸ்(புதியது)-9ரூபா 50சதம் லக்ஸ் (பழையது) - 9 ரூபா, லைபோய் - 8 ரூபா 50 சதம், ராணி - 10 ரூபா.

(அ-162)

## வடக்கு - கிழக்கில் பணிபுரிய மேலும் 5,000 பொலீஸார் நியமனம்

கொழும்பு, நவ. 9

வடக்கு - கிழக்கில் பணியாற்றுவதற்காக மேலும் ஐயாயிரம் பொலீஸார் நியமிக்கப்படுவார்கள் என்றும் — இவர்கள் இம்மாகாணத்தில் உள்ள பொலீஸ் நிலையங்களில் பணிபுரிவார்கள் என்றும் — தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான அனுமதியை பொலீஸ் திணைக்களத்துக்குப் பாதுகாப்பு அமைச்சு வழங்கியிருக்கிறது. இதனைத் தொடர்ந்து பொலீஸ் திணைக்களத்துக்கு புதிதாக ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியில் பொலீஸ் தலைமைப் பீடம் ஈடுபட்டுள்ளது.

## தமிழ் மொழித்திறன் பரீட்சை

அரியாலை, நவ. 9

இருபாலைத் தமிழ் மன்றம் ஏற்பாடு செய்துள்ள தமிழ் மொழித்திறன் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அந்த அந்த பாடசாலை மண்டபங்களில் நடைபெறும்.

இப் பரீட்சைக்கு 3ஆயிரத்துக்கு அதிகமான மாணவர்கள் விண்ணப்பித்துள்ளதாகவும்— இலங்கையில் தமிழ் மொழித்திறன் பரீட்சை நடைபெறுவது இதுவே முதல்முறை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

[த-17]

## முழு நிலா அறிவியல் கருத்தரங்கு

யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் நடத்தும் முழு நிலா அறிவியல் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3மணிக்கு கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இன்றைய அரங்கில் யாழ். பல்கலைக்கழக புவியியற்துறை தலைவர் திரு. பாலச்சந்திரன் 'சர்வதேச அரசியல் விவகாரங்களில் புவிசார் அரசியலின் முக்கியத்துவம்' என்ற பொருளிலும்— புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கார்த்திகேசு குகபாலன் 'தமிழ் மக்களின் இடப் பெயர்வும் அதனால் ஏற்பட்ட விளைவுகளும்' என்ற பொருளிலும் கருத்துரை வழங்குவார்கள்.

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

கிளிநொச்சிக் கிளை.

### தமிழ் - ஆங்கில தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயிற்சி போதனாசிரியருக்கான பதவி வெற்றிடம்

மேற்படி பயிற்சி நெறிக்கான போதனாசிரியர்கள் இலங்கை தொழிநுட்பக்கல்லூரியில் தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிற்சியில் பெற்ற சான்றிதழும், அனுபவமும் உள்ளதோடு 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி:- 24 — 11 — 1992

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

இலங்கை செஞ்சிலுவை சங்கம்,
இல. 396, கண்டி வீதி,
கிளிநொச்சி,

வேதனம்:- நேரில் கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்.

(23191)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையும் இணைந்து கிளிநொச்சி மாவட்டத்தில் பின்வரும் பயிற்சிநெறிகளை விரைவில் ஆரம்பிக்கவுள்ளன. 17 வயதிற்கும் 25 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் இப்பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

01. தமிழ் தட்டெழுத்து/சுருக்கெழுத்தாளர் (க. பொ. த (சா/த) தமிழ் மொழி திறமைச் சித்தியுடன்)
02. ஆங்கில தட்டெழுத்து/சுருக்கெழுத்தாளர் (க. பொ. த. (சா/த) ஆங்கில மொழி திறமைச் சித்தியுடன்)
03. எழுதுவினைஞர் பயிற்சி
04. தையல் பயிற்சி
05. உதவித் தாதியர் பயிற்சி
06. கைவினைஞர் பயிற்சி
07. மோட்டார் சைக்கிள் திருத்துனர்
08. உழவு இயந்திர திருத்துனர்
09. தச்சு வேலைகள்
10. நீர் இறைக்கும் இயந்திர திருத்துனர் பயிற்சி
11. அச்சுக்கூட வேலைகள்
12. புகைப்படப் பிடிப்பாளர் பயிற்சி

மேலதிக விபரங்களையும், விண்ணப்பப்படிவங்களையும் கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொன் விநாயகமூர்த்தி.
கௌரவ செயலாளர்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
கிளிநொச்சிக் கிளை,
386, கண்டி வீதி,
கிளிநொச்சி.

(23192)

## கிழக்கில் அதிரடிப்படை முகாம்கள்

கொழும்பு, நவ. 9

கிழக்கு மாகாணத்தில் அதிரடிப்படை பொலீஸாரின் முகாம்கள் மண்டூர், 16ஆம், 14ஆம், 13 ஆம், 10 ஆம் கொலனிகள் குமரிகம் மத்திய முகாம் பகுதிகளில் அமையும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(த-எ)

## பட்ஜெட் விவாதம் நாளை

கொழும்பு, நவ. 9

1993 வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதம் நாடாளுமன்றத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இதன் மீதான இறுதிக்கட்ட வாக்கெடுப்பு இம்மாதம் 18ஆம் திகதி மாலை 6 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## பாடசாலை அணிகளிடையே உதைபந்தாட்டப் போட்டி

### இன்று முக்கிய ஆட்டங்கள்

யாழ். சங்கீத் இணைக்களம் யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் ஆறு ஆட்டங்கள் இன்று மாலை பல்வேறு மைதானங்களில் நடைபெறவிருக்கின்றன.

**19 வயது பிரிவு**

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் நான்கு ஆட்டங்கள் இன்று நடைபெறவிருக்கின்றன.

சென் ஜோன்ஸ் மைதானத்தில் இன்று மாலை இரண்டாவதாக நடைபெறும் ஆட்டத்தில் சென் ஹென்றீஸ் அணியை எதிர்த்து நெல்லியடி ம. ம. வி. அணி மோதும்.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் மகாஜனாக் கல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணியும் புங்குடுதீவு ம. வி. அணியை எதிர்த்து வவரத்தினம் ம. ம. வி. அணியும் மோதும்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று மாலை இரண்டாவதாக நடைபெறும் ஆட்டத்தில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அ. மி. கல்லூரி அணி மோதும்.

**17 வயதுப் பிரிவு**

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் சென். சார்ள்ஸ் ம. வி. அணியை எதிர்த்து ஸ்கந்தவரோதயா அணி மோதும்.

சென். ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா அணியை எதிர்த்து சென். ஹென்றீஸ் அணி மோதும்.

(உ)

## இலங்கைதிட்டமிடல்சேவை உதவிப் பணிப்பாளர் பதவி

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வண்ணார்பண்ணை, நவ. 9

இலங்கை திட்டமிடற் சேவையின் IIஆம் வகுப்பு தரம் இரண்டு உதவிப் பணிப்பாளர் பதவிகளுக்கான மனுக்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவித்தல் கடந்த மாதம் 23ஆம் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

22 - 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் இப் பதவிக்கு விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் இம் மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு யாழ். செயலக திட்டமிடல் பணிமனையுடன் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

[த-162]

தமிழகத்துக்குள் வெடிமருந்து கடத்தினார்களாம்

## 14 ஈழத் தமிழருக்கு எதிராக குற்றப் பத்திரம் தாக்கல்

கொழும்பு, நவ. 9

தமிழகத்தில் தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தமிழ்நாட்டுக்குள் வெடிமருந்துகளைக் களவாகக் கடத்திக்கொண்டு வந்ததாக தடா சட்டத்தின் கீழ் — விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கி வருபவர் என்று கூறப்படும் ஏஜண்ட் பத்மநாதன் உட்பட 14 இலங்கைத் தமிழருக்கு எதிராக நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள விசேட நீதிமன்ற நீதிபதி திரு. இராமகிருஷ்ணன் முன்னிலையில் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் திரு. இராமச்சந்திரன் இக் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்தார்.

[த-எ]

## கலை, வர்த்தக கல்லூரி

(வெலிங்டன் சந்திக்கு அருகாமை)

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

### இலவச O/L கருத்தரங்கு

யாழ். நகரின் தனித்துவமும், அனுபவமும் வாய்ந்த பிரபல்ய ஆசிரியர் குழு வழங்குகின்றது.

ஆரம்பம்: 10 - 11 - 1992

கருத்தரங்கின் ஆசிரியர் குழு:

| | |
|---|---|
| விஞ்ஞானம் | — திரு இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — திரு. இரா. அருட்செல்வம் |
| சமூகக்கல்வி | — திரு. கணேஷ் |
| தமிழ் | — திரு. கோப்பாய் சிவம் |
| வர்த்தகமும் கணக்கியலும் | — திரு. விக்கி |
| ஆங்கிலம் | — திரு. ஜெயகாந் |

இடம்பெயர்ந்த மாணவர்களின் நலன் கருதி நடைபெறுவதனால் சகல மாணவர்களும் கலந்து கொள்ளவும்.

— நிர்வாகி.

[கி-3768]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வெள்ளை நிற இத்தாலி வெஸ்பா விற்பனைக்குண்டு. P150X தொடர்புகளுக்கு: A. R. Rajoo ஓய்வு பெற்ற மதுவரி உதவி ஆணையாளர், கச்சாய் வீதி, சாவகச்சேரி. [23187]

அடை வைப்பதற்கு ஏற்ற ஒறிஜினல் பெண்டம், வெள்ளடியன் கோழி முட்டைகளும், 1½ வயது நிரம்பிய பெண் அல்சேஷன் நாயும் விற்பனைக்கு உண்டு. வி. எம். பாக்கியநாதன், சாந்தன் வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். [23179]

## விற்பனையாகின்றது

எமது விலாசமிடப்பட்ட ஒவ்செட் பெரிய கலண்டர்கள் ரூபா 15/-க்கு விற்பனையாகின்றன. வியாபாரிகளுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம் — புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (23188)

எம்மிடம் மூன்று அளவுகளில் கலண்டர்கள் விற்பனைக்குண்டு. படங்கள் தனியாகவும், கிலிப் தனியாகவும் பெறவிரும்புவர்கள் எம்மிடம் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு தகுந்த கழிவு வழங்கப்படும். ஸ்ரீகாந்தா அச்சகம்— புத்தகசாலை. (23189)

## உடன் விற்பனைககு

கறுப்பு + பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொகையாக பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட கழிவுண்டு. மல்லிகா வதி, சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [5557]

Prima+Bahira+Hy-Line+Christombu (பிறிமா + பகிரா + கைலைன் + கிறிஸ்தம்பு) ஆகிய இன வேட்டுக் குஞ்சுகள் மற்றும் புறொய்லர் குஞ்சுகளுக்கு தொடர்பு கொள்ளவும். [5558]

## வெளிவந்துவிட்டது

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களின் மீள்பார்வையுடன் கூடிய சைவநெறி, தமிழ் மீட்டலுக்கான வினா-விடை ஆண்டு 11. ஆக்கம்: க. சந்திரசேகரம், வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப்புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [சி-3668]

## ஞானவழி

காஞ்சிப் பெரியவருடைய 99 ஆவது ஜெயந்தி சிறப்பிதழ் பெரிய இரண்டு வர்ணப் படங்களுடன் விற்பனையாகின்றது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-3768]

## சோதிடம

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உடல்நோய், மனக்கவலை என்பன தீருமா? கேட்டுப் பாருங்கள்! த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, நல்லூர் கோவில் பின் வீதி. (23185)

## M. L. T. தேவை

பிரபல தனியார் வைத்திய நிலையம் ஒன்றிற்கு உடனடியாக அனுபவமிக்க வைத்திய ஆய்வுகூட நுட்பவியலாளர்கள் (M. L. T.) தேவை. நேரடியாக சான்றிதழ்களுடன் இல: 17, கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணத்திலுள்ள வில்லியம் ஹாவே ஞாபகார்த்த மருத்துவமனை நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளவும் – நிர்வாகம். (23199)

## மணமகள் தேவை

36 வயது, அச்சுவினி நட்சத்திரம், ஜெர்மனியில் தொழில் புரிபவருக்கு 26—30 வயதிற்கு இடைப்பட்ட அழகிய, மெல்லிய பெண் தேவை. ஸ்பொன்சர் செய்து அழைப்பார். தொடர்பு கொள்ளவும். இல 461, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [23181]

## தவறிவிட்டன

ஆலங்கேணி நல்லூர் இராலி கடற்கரைப் பாதையில் பெறுமதிவாய்ந்த சேலைகள், சட்டைகள், எவர்சில்வர் சட்டி, மண்ணெண்ணை அடுப்பு ஆகியன 14-10-92ஆம் திகதி நீல நிறப் பையுடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். திரு. க. இராசலிங்கம், கணபதி வாசா, வதிரி-நெல்லியடி வடக்கு. [23186]

## இடமாற்றம்

யாழ். நாவலர் வீதியில் இயங்கிய எமது கிளை வைத்தியசாலையான ''ஆனந்த மருத்துவ நிலையம்'' அன்பர்களது கோரிக்கைக்கு இணங்கத் தற்போது நல்லூர் கோவில் பின்வீதி 384, சிவா வைத்தியசாலைக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது. காலை 8-30 முதல் 12-30 வரை. பிற்பகல் 3-00 முதல் 6 வரை. டாக்டர் த. சிவானந்தன். (23184)

## O/L மாணவர்களுக்கு

கடந்த நான்கு வருடப் பரீட்சையின் எல்லா வினா-விடை மலிவு விலையில் விற்பனையாகின்றது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்திக்கு அருகாமை, யாழ்ப்பாணம். (சி-3769)

## ஆண்டு - 6 அனுமதி

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு - 6 அனுமதிக்கான மாதிரிப் பரீட்சைகள் 01-11-1992, 03-11-1992, 05-11-1992, 07-11-1992, 08-11-1992, 10 - 11 - 1992, 12-11-1992 ஆகிய தினங்களில் பி.ப.3-30 மணிக்கு நடத்தப்படும். Bond Institutes, 58A ஸ்டான்லி வீதி. யாழ்ப்பாணம். [சி-3752]

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரி அனுமதிப் பரீட்சை 10-11-92 செவ்வாய் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெறும். பரீட்சைக்கு தோற்ற முடியாதவர்கள் வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [23195]

## செவிப்புலன் இழந்தோர் 30 லட்சம் பேர்

சென்னை. நவ 9

இந்தியாவில் சுமார் 30 லட்சம் பேர் காது கேளாத நிலையில் உள்ளனர்.

அண்மையில் சென்னையில் நடைபெற்ற இந்திய செவியியல் கழகத்தின் முதலாவது ஆண்டுவிழாவில் உரை நிகழ்த்துகையில் தமிழ்நாடு ஆளுநர் பீஷ்மன் நாராயண்சிங் இதனைத் தெரிவித்தார்.

இரைச்சலினால் ஏற்படும் பாதிப்பே செவிப்புலன் இழப்பதற்குப் பிரதான காரணமாக இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

இந்த இரண்டு நாள் மாநாட்டில் இலங்கை, இந்தியா, மலேசியா, அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த டாக்டர்கள் கலந்து கொண்டுள்ளனர். (இ)

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 11 — 01 — 1926

மறைவு: 21 — 10 — 1991

### அமரர் கந்தையா சிவபாதசுந்தரம்

அன்புக்கும் பாசத்திற்கும் உரிய
அன்பு அப்பா! ஆண்டு ஒன்று சென்றாலும்,
உங்கள் பிரிவால் ஆறாத்துயரில் வாடுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
குடும்பத்தினர்.

''ஜோதீபம்'',
ஏழாலை மேற்கு,
சுன்னாகம். [5423]

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் விசேட பொதுக்கூட்டம்

காலம் : 1992 - 11 - 29 ஞாயிறு காலை 10-00 மணி
இடம் : குமாரசாமி மண்டபம்
விடயம் : மைதான விரிவாக்கம்

சகல அங்கத்தவர்களும் தவறாது கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விசேட வேண்டுகோள் :

அங்கத்தவர்களின் முதற்பெயர், பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, தகைமைகள், தொழில் போன்ற பூரண விபரங்களைப் பெற்று முழுமையான அங்கத்துவப் பதிவேடொன்று தயாரிப்பதற்கான இறுதிக்கட்ட வேலைகள் சங்கத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்பின் அங்கத்துவ அட்டைகள் வழங்கப்படவுள்ளன. எனவே சகல அங்கத்தவர்களும் மேற்கூறிய விபரங்களுடன் தபாலிலாவது நேரில் தொடர்புகொண்டு உடன் அறியத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பாலசுப்பிரமணியம் தவபாலன்
செயலாளர்

யாழ் இ. க.
ப. மா. ச. [சி/3682]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு:
(யாழ்ப்பாணம்)
12 — 07 — 1937

உதிர்வு:
(அவுஸ்திரேலியா)
09 — 11 — 1991


### திருமதி புஸ்பராணி குலநாயகம்

எம்மை விட்டு பிரிந்தாலும் தங்களின் இனிய நினைவுடனே வாழ்ந்து தங்களின் எதிர்காலக் கனவுகளை நனவாக்குவோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:
தாய், கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள், சகோதரி, மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனிகள், மைத்துனன்.

'றாடிக் கொட்',
33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். [23198]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு:
31 - 01 - 1953

அநியாய அழிப்பு:
09 - 11 - 1988

### சோமசுந்தரம் ஜெயக்குமார்

(வருமான மேற்பார்வையாளர் – பிரதேச சபை, உடுவில் உப அலுவலகம்)

எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
நாங்கள் எங்கள் செல்வனை மறக்கமாட்டோம்
உன்னை நினைக்க நெஞ்சம் பதறுதே
நாங்கள் என்ன செய்வது.

பெற்றோர், உறவினர்கள்.

அளவெட்டி தெற்கு. [23168]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### நீதியோடு சேர்ந்த அமைதியே தேவை

இன்றைய நிலையில் நீதியோடு சேர்ந்த அமைதி கிடைக்க வேண்டும். மக்களின் இன்னல்கள் நீங்கி அமைதி தோன்ற வேண்டும். அந்த இலக்கினை அடைய ஏனைய சமயத் தலைவர்களுடன் இணைந்து செயற்படுவேன்.

இவ்வாறு யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் புதிய ஆயராகப் பதவியேற்றுள்ள மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் தெரிவித்துள்ளார். தமது பதவியேற்பு—வரவேற்பு நிகழ்ச்சியில் நிகழ்த்திய கன்னிப் பேச்சில் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

தமது உறவினர்களை, சொத்துக்களை, சொந்த இடங்களை இழந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் இன்னல்களைக் களைவதற்கு ஆண்டவர் நம்முடனே இருக்கிறார் என்ற உணர்வுடன் செயலாற்றுவோம் — என்றும் அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

மறை அறிவில் ஆழ்ந்த புலமையும், அனுபவமும், ஆற்றலும் நிறைந்த ஆயரின் கூற்றுக்கள், கருத்துக்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியனவாகும்.

கலகமும், குழப்பமும் தொடர்ந்து கொண்டே போவதால் அமைதி தேவை என்று மனம் அவசரப்படுவது இயல்பு. ஆனால் யுத்தம் முடிவுக்கு வரவேண்டும் என்பதற்காக அநீதிகள் பொதிந்த அமைதியை நாடலாமா? அன்றி தற்காலிக அமைதியினால் தான் என்ன பயன்? அநீதியான, தற்காலிகமான அமைதியினை விரும்பி, இதுவரை அனுபவித்த அவலங்களுக்கு, இழப்புகளுக்குப் பயன் இல்லாமல் போக அனுமதிக்கலாமா? அதனாலேயே ஆயர் நீதியோடு சேர்ந்த அமைதி என்று அர்த்த புஷ்டியாகக் கூறியுள்ளார்.

கஷ்டப்பட்டுக் களைத்துப் போனோம். யுத்தம் நீண்டு விட்டது. இடைவெளி தேவை. தற்காலிகமாகவாவது அமைதி தேவை.— இவ்வாறு சலிப்படையும் ஈழத்தமிழர்கள் பலருக்கு ஆயரின் வாக்கு புத்தி புகட்டுவதாக.

மக்களுக்குத் தேவைப்படும் நீதியான அமைதியைத் தேடி உழைப்பதற்கு ஏனைய சமயத் தலைவர்களுடன் இணைந்து செயலாற்றப் போவதாக அவர் பூண்டிருக்கும் திடசங்கற்பம், எல்லாவற்றையும் விட மேலோங்கி நிற்கிறது.

தமிழர்கள் அவர்கள் எச்சமயத்தவராயினும் ஒரே மக்கள், ஒரே குடும்பம் என்ற பாசத்துடனும் பரிவுடனும் இந்த வேளையில் செயற்படத் தவறுமேயானால், விடுதலைப் போராட்டத்தின் மத்தியில் வாழும் நாம் பலவீனமுற்று விடுவோம். அந்தப் பலவீனத்தை ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது பலமாக்கிக் கொண்டுவிடும்.

இன்னல் நிறைந்த இவ்வேளையில் இறைவன் பெயரால்— சமயங்களின் பெயரால்— ஈழத்தமிழர்கள் எல்லோரும் அடம்பன் கொடி போல திரண்டு நிற்கவேண்டும். அதுவே எமது இன்னல்கள் நீங்கி நீதியான அமைதிக்கு வழிஇட்டுச் செல்லும்.

# அகதி முகாம் வாழ்க்கையின் அவலங்கள்; ஒன்று மாறி ஒன்றாகத் தீராத துன்பங்கள்

நெடிதுவளர்ந்த தென்னை மரங்கள், ஆனாலும் பள்ளக்காணி. சுமார் ஐம்பது குடிசைகள் அருகருகே அமைக்கப்பட்டுள்ளன. பிறந்த மேனியாக அங்குமிங்கும் ஓடித்திரியும் சிறுவர்கள். அந்தக் குடிசைப் பிரதேசத்தினுள் நுழைகிறேன், நேரம் பிற்பகல் 5-30 மணி. வானத்தில் மழை மூட்டம் இருட்டும் நேரம். 38 வயதுடைய குடும்பத்தவர் ஒருவர் தம் குடிசை தாழ்வாரத்தில் அம்மியில் சம்பல் அரைக்கிறார்.

என்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறேன். சம்பல் அரைத்த கையுடன் பாரும் தம்பி, எப்படியான சுவீட்டில் சகல வசதிகளுடனும் வாழ்ந்த எனக்கு இன்று இந்த நிலை. இதுகூட எத்தனை நாளைக்கு நிலைக்குமோ...? என்று பெருமூச்சு விடுகிறார் இலகலை உயரப்புலத்தைச் சேர்ந்த பொ. இன்னராசா.

என்ன தொழில் செய்கிறீர்கள் இப்போது? — என்றேன்.

இப்போது சம்பல் அரைக்கிறேன்! தெரியவில்லையா? — என நகைச்சுவையாக கூறிவிட்டு —

தொழிலா கேட்கிறீர்கள்? எனது ஊரில் சொந்தமாக தோட்டங்கள், வயல்கள் இருந்தன. அவை எல்லாம் இழந்து விட்டு, இங்கு வந்து கூலிவேலை, உழவு, வயல் வேலைகளுக்கு செல்கிறேன். அதுவும் எல்லா நாட்களும் இடையாது கிடைக்கும் வருமானம் எனது குடும்பம் ஒரு நேர சோறு சம்பலுடன் சாப்பிடத்தான் போதும். இரவு உணவுக்கு சம்பல் அரைக்கிறேன் — என்கிறார் அவர்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அகதிமுகாமில் வாழ்பவர்களின் நிலைமையை நேரில் கண்டறியும் நோக்குடன் மானிப்பாயில் உள்ள அகதிமுகாம் ஒன்றுக்குச் சென்றபோது தான் அவரைச் சந்தித்தேன்.

தத்தம் சொந்த வீடுகளில் சகல வசதிகளுடனும் வாழ்ந்து சத்தான உணவு உண்டு, நிம்மதியாக வாழ்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று வீடு வாசல், நில புலன்கள், சொத்துக்களை இழந்து உடுத்த உடையுடன் ஓடிவந்து அகதிமுகாம்களில் ஒருநேர உணவுக்குக் கூட வழியின்றி வாழும் பரிதாப நிலையை இப்பிரதேசத்தில் காண முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்து வரும் இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து, 207 அகதிமுகாம்களில் 14,460 குடும்பங்களைச் சேர்ந்த 62 729 பேர் அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். (இடம் பெயர்ந்து உறவினர்களோடும் நண்பர்களோடும், தெரிந்தவர்கள் வீடுகளிலும் வாழ்வோர் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை.)

இவர்களில் வலிகாமம் மேற்கு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டும் 37 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. 3,904 குடும்பங்களைச் சேர்ந்த 15,445 பேர் இம்முகாம்களில் தங்கியுள்ளனர். குடாநாட்டின் சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மிகக் கூடுதலான முகாம்கள், குடும்பங்கள் மக்களை அதிகளவாக கொண்டுள்ள பிரிவு சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவாகும்.

நேரில் பார்த்து எழுதியவர்: "விஸ்வபரி"

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு நிதியம், செஞ்சிலுவைச் சங்கம், தென் இந்திய திருச்சபை, மனித முன்னேற்ற நடு நிலையம் போன்ற பொது நிறுவனங்கள் இவர்களுக்கு வேண்டிய ஒரு சில வசதிகளை செய்து கொடுத்து வருகின்றன.

**சமூக சேவை செய்யும் மூதாட்டி**

குடிசை வாசலில் குறுக்குக் கட்டுடன் குந்தி இருந்து பெட்டி இழைக்கின்ற இளவாலை சுப்பன் சோதி (வயது 68) யிடம் எனது கவனம் செல்கின்றது.

"என்ன பெட்டி வியாபாரமா?" என்றேன்.

நிமிர்ந்து பார்த்த அம் மூதாட்டி —

"தம்பி, இங்கு யாருக்கு கோனை வியாபாரம் செய்கிறது? எல்லாரும் அகதிகளாக வந்துவிட்டோம். என்னால் முடிந்த உதவியாக குடிசைகளில் உள்ளவர்களுக்கு பெட்டி இழைத்துக் கொடுக்கிறேன் — என்றார்.

**மருந்துக்குப் பதில் மந்திரம்**

தள்ளாத வயதிலும் உற்சாகத்துடன் செயற்பட்டு பிறருக்கு உதவும் இம் மூதாட்டியின் பொதுச் சேவை மனம் எங்களில் எத்தனை பேருக்கு உண்டு...? என்ற மனக்கேள்வியுடன் அடுத்த குடிசையை நோக்குகிறேன்.

குடிசை வாசலில் மக்கள் கூட்டம், வலிப்பு வந்த தம்ப ராசா இரத்தினம் என்பவருக்கு 'பெந்திகோஸ்' மதத்தவர்கள் நோய் மாற மந்திரம் செபிக்கின்றனராம். வலி வந்தவரை செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் மானிப்பாய் ஆஸ்பத்திரியில் சேர்ப்பதற்கு அம்புலன்ஸ் உதவி கோரப்பட்டதாகவும் டீசல் இல்லை எனக்கூறி அம்புலன்ஸ் தரப்படாமையால் நோயாளியை கைத்தாங்கலாக நவாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்று முதலுதவி வைத்தியம் செய்து வலி குறைய கூட்டி வந்ததாகவும் தெரிவித்தார்கள். அந் நோயாளி பெந்திக்கோஸ் மதத்தவராகையால் மந்திரத்தால் நோயை மாற்ற மந்திர ஜெபம் செபிக்கப்படுவதாகவும் கூறினார்கள்.

**நோய்கள் பரவுகின்றன**

முகாம்களில் சரியானபடி சுகாதார வசதிகள் பேணப்படாமையால் நோய்கள் பரவி வருகின்றன. வயிற்றோட்டம் காரணமாக வைத்தியன் பாரு (வயது 65) என்பவர் முகாமில் இறந்துள்ளார். சிறு குழந்தைகளுக்கும் வயிற்றோட்டம் தீவிரமாகப் பரவி வருகின்றது. செஞ்சிலுவைச் சங்கம், சுகாதாரசேவைகள் பிரிவினர் வயிற்றோட்டத்துக்கான "ஜீவனி" பானம் வழங்கி வருகின்றனர். இருப்பினும் வயிற்றோட்டம், கண்நோய், நெருப்புக்காய்ச்சல், சின்னமுத்து போன்ற நோய்கள் அதிகமாக காணப்படுகின்றன.

கல்வி, சுகாதாரம் போன்றவற்றை கவனிக்கவும், ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கவும் முகாம்களில் உள்ள படித்த, பயிற்சி பெற்ற சில யுவதிகளை ஒழுங்கு செய்துள்ளனர். ★

[ஈஞ்சம்]

## மக்கள் தொடர்பு சாதனங்களாக சஞ்சிகைகளும் விளங்குகின்றன

### "மாற்றம்" வெளியீட்டு வைபவத்தில் பேச்சு

'இன்றைய சூழ்நிலையில் மக்களிடையே தொடர்புகளை ஏற்படுத்தும் சாதனங்களாக சஞ்சிகைகள் விளங்குகின்றன'.

இவ்வாறு தெரிவித்தார் எழுத்தாளர் செம்பியன் செல்வன்.

தமிழ்த் தாய் மன்றத்தினரின் 'மாற்றம்' சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியீட்டு வைபவம் யாழ். கம்பன் கோட்டத்தில் அண்மையில் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்துரை வழங்குகையில் திரு. செம்பியன் செல்வன் மேலும் தெரிவித்ததாவது;

இதழியல் பற்றிய கல்வியின் சமூக முக்கியத்துவம் இன்று பலராலும் உணரப்படுகிறது. வானொலி தொலைக்காட்சி போன்ற, தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்த முடியாத நிலையில் இதழியல் பற்றிய கல்வி நல்ல சஞ்சிகைகளினது பொது சனத் தொடர்பை அறிய உதவும் — என்றார்.

கலாநிதி கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடந்த வெளியீட்டு வைபவத்தில் யாழ் இந்துக் கல்லூரி அதிபர் திரு, அ. பஞ்சலிங்கம் சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார்.

யாழ், மத்திய கல்லூரி அதிபர் திரு. நா. க. சண்முகநாதபிள்ளை, திரு, சொக்கன் கவிஞர் சோ. பத்மநாதன், மல்லிகை ஆசிரியர் ஜீவா உட்பட பலர் கருத்துரையாற்றினர்; (த-5)

## இலங்கைக்கு எதிரான ஆயுத தடையை நீக்க உத்தரவு

இலங்கைக்கு ஆயுதங்கள் வழங்கப்படுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்குமாறு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் உத்தரவிட்டிருக்கிறார்.

இத் தகவலை 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டிருக்கிறது.

பிரிட்டனின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பான துணை அமைச்சர் அண்மையில் இலங்கை வந்தபோது தடையை நீக்குவது பற்றிய அறிவிப்பை வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர் கல்வித் திட்டத்தில் கடலகவளம் பாடம் சேர்ப்பு

எமது நாட்டின் முக்கிய வளங்களில் ஒன்றான கடல்வளம் பற்றிய அறிவை மாணவர்கள் பெற்றுக் கொள்ள உதவும் வகையில், யாழ்.பிரதேச பாடசாலைக் கல்வித் திட்டத்தில் "கடலகவளம்" பற்றிய பாடப் பரப்பும் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளது.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. அ. துரைராஜா தலைமையில், அண்மையில் கூடிய குழு ஒன்று இது தொடர்பான தீர்மானத்தை எடுத்தது.

இத்திட்டம் பின்வருமாறு நடைமுறைப்படுத்தப்படும்;

★ ஆண்டு 4, 5, 6 வகுப்புகளில் விஞ்ஞானம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களில் பொருத்தமான இடங்களில் கடல்வளம் தொடர்பான திறன்களைக் கற்பித்தல்.

★ ஆண்டு 7, 8 வகுப்புகளில் — வாழ்க்கைத் திறன் பாடத்தில் கடல்வளம் தொடர்பான திறன்களைக் கற்பித்தல்;

★ ஆண்டு 9—11 வரையில் தொழில் நுட்பப் பாடமாகக் கற்பித்தல்; (த)

## பருத்தித்துறையில் பொருள்களை இறக்கும் லொறிகளுக்கு "ஓயில்"

யாழ்ப்பாணம், நவ 9

பருத்தித்துறையில் கப்பலில் இருந்து பொருள்களை இறக்கும் வேலையில் ஈடுபடுத்தப்படும் 'பாஜ்'களை கட்டி இழுக்கும் வள்ளங்களுக்கும் — பொருள்களை அங்கிருந்து ஏற்றிவரும் லொறிகளுக்கும் தேவையான 'ஓயிலை' வழங்குவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

இத்தகவலை யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்;

வள்ளங்களுக்குப் பயன்படும் 'ஓயில்' கிடைக்காததால் பொருள்களை இறக்கும் வேலைகள் பாதிக்கப்படுவது குறித்து யாழ். அரச அதிபர் கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதாகவும் — அதன் பின்னர் மட்டுப்படுத்தப்பட்டளவு ஓயிலை யாழ்ப்பாணத்துக்கு அனுப்ப அனுமதி கிடைத்திருப்பதாகவும் தெரியவந்தது.

(த-5)

## பௌர்ணமி தீப இசையரங்கு

யாழ்ப்பாணம், நவ 9

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பௌர்ணமி தீப இசை அரங்கில் இன்று திருமதி சரோஜினி சிவகுருநாதன், செல்வி பிரசாந்தி இராமச்சந்திரன் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரி இடம்பெறும்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேற்றும் ஒரு குழந்தை பலி!

யாழ்ப்பாணம், நவ. 9

ஏயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளில் மேலும் ஒரு குழந்தை நேற்று முன்தினம் இரவு மரணமானது.

இந்தக் குழந்தையுடன் யாழ். ஆஸ்பத்திரியில் — கடந்த 8 நாட்களில் மட்டும் — 11 குழந்தைகள் வயிற்றோட்டத்தினால் பலியாகியுள்ளனர்.

இதேசமயம், இந்நோய்க்கு இலக்கான மேலும் 12 குழந்தைகள் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர். (ஒ-15)

---

## மரண அறிவித்தல்கள்

### கெங்காதரம் நாகம்மா

வேலணை கிழக்கு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சரன் தியேட்டர் ஒழுங்கை யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கெங்காதரம் நாகம்மா அவர்கள் நேற்று 08-11-92 காலமானார். இவர் கெங்காதரத்தின் அன்பு மனைவியும், அமிர்தகௌரி (கலி), ராஜன், சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெயகுமாரி பவானி ஆகியோரின் மாமியாரும், சஜந்தனின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (09-11-92) 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சசி

சரன் தியேட்டர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (23204)

---

திருமதி
### அன்னம்மா இராஜசிங்கம்

சங்கானையைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி அன்னம்மா இராஜசிங்கம் காலமானார்.

இவர் திருமதி தனலட்சுமி நடராசா கனகசிங்கம் (U.K.), குணசிங்கம் (U.K.) பூபாலசிங்கம் (Aust.), காலஞ்சென்ற திருமதி அன்னலட்சுமி சோதிநாதன், ஜெயகுமார் (Norway) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை, சின்னம்மா மற்றும் செல்வநாயகம், தம்புசாமி, விசுவநாதன் (Malaysia) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09-11-1992) காலை 10 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி தனலட்சுமி நடராசா.

சேச் றோட்,
சங்கானை. (23201)

---

### வேலுப்பிள்ளை நாகலிங்கம்
(பொன்னுடையார்)

வேலுப்பிள்ளை நாகலிங்கம் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மார்கழிப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (9-11-1992) திங்கள் காலை 8-00 மணிக்கு அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடைமயானத்தில் தகனம் செய்யப்படும். இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. மீனாட்சி சுந்தரம்,
(உரிமையாளர், சுந்தரம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்)
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (5424)

---

### செபஸ்ரியன் மமஸ்ஸ்

குருநகரைச் சேர்ந்த திரு செபஸ்ரியன் மமஸ்ஸ் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (08-11-92) பருத்தித்துறையில் காலமானார். இவர் திருமதி தங்கம் அவர்களின் அன்புக் கணவரும், வளர்மதி, கோகுலம், வெண்டி, யூட், குஞ்சரம், கொலின், ஜோர்ஜ், மேர்சி, செரின் ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. கிரகரி, திரு. விக்ரர், திரு யோசை, திரு. எட்வேட், திருமதி அக்னஸ் யோசப், திருமதி ஞானமணி சேவியர், திருமதி பிலோமினா, றெஜி ஆகியோரின் சகோதரனும், திரு. யோசப், திரு சேவியர், திரு. பிரான்சிஸ், திரு. யோகம், திரு. யேசுதாசன், திரு. இராசநாயகம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 09-11-1992 காலை 10-00 மணிக்கு இல. 39, 2ஆம் குறுக்குத் தெரு, மணியந்தோட்ட இல்லத்திற்கு எடுத்து வரப்படும். அடக்க ஆராதனை ஒழுங்குகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
தி. நீ. அருளானந்தம் சேவியர்.

39 2ஆம் குறுக்குத் தெரு,
மணியந்தோட்டம். (23197)

---

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மற்றுமொரு புதிய திட்டம்!

## தெரிவுக்குழுத் தலைவர் மங்கள தயாரிப்பு

கொழும்பு, நவ. 9

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவரான மங்கள முனசிங்க இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான புதிய யோசனை ஒன்றைத் தயாரித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இந்தத் தீர்வுத் திட்டத்தின் பிரதிகளை சம்பந்தப்பட்ட தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளிடமும் ஜனாதிபதியிடமும் அவர் கடந்த வாரம் சமர்ப்பித்திருந்தார் என்றும் அச்செய்திகள் தெரிவித்தன.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சார்பில் சமாதானத் திட்டம் ஒன்றை குழுவின் தலைவரான மங்கள முனசிங்க அண்மையில் வெளியிட்டதும்—

கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளும், சிங்களவர் பாதுகாப்பு இயக்கமும் (சிங்கள ஆரக்ஷய சம்விதானயவும்) அடியோடு நிராகரித்தது தெரிந்ததே.

இந்த யோசனைக்குப் புறம்பான புதிய திட்டம் ஒன்றையே திரு. மங்கள முனசிங்க இப்போது தயாரித்திருக்கிறாராம்.

இதற்கிடையில் —

"தமிழ்க் கட்சிகளிடம் புதிய யோசனை" — என்ற தலைப்பில் வீரகேசரி வார இதழ் நேற்று செய்தி ஒன்று வெளியிட்டிருந்தது.

"வடக்கு-கிழக்கிற்கு தனித்தனி மாகாண சபைகள், ஆளுநர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும்" — என்று அந்த யோசனையில் தெரிவிக்கப்பட்டிருந்ததாகவும் "வீரகேசரி" செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேசமயம் —

இனப்பிரச்சினைக்கு இவ்வருட இறுதிக்குள் சமாதானத் தீர்வு கிடைத்து விடும் என்று தாம் நம்புவதாக திரு. மங்கள முனசிங்க கொழும்பில் தம்மைச் சந்தித்த சில பிரமுகர்களிடம் தெரிவித்ததாகவும் அறிய வந்தது. (உ-எ)

# வெளிநாட்டவர் மீதான தாக்குதல்; கண்டித்து ஜேர்மனியில் பேரணி

## ஜனாதிபதி மீது முட்டை, கற்கள் வீச்சு!

லண்டன், நவ 9

இனவாதத்துக்கு எதிராக ஜேர்மன் நகரான பெர்லினில் நேற்று பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட பேரணியும், ஆர்ப்பாட்டமும், பொதுக் கூட்டமும் நடைபெற்றன.

இக்கூட்டத்தில் பேசுவதற்காக எழுந்த ஜேர்மன் ஜனாதிபதி ஹொன்சக்கர் மீது முட்டைகளும் கற்களும் வீசப்பட்டன.

வெளிநாட்டவர் குடியேறுவதற்கு ஜேர்மன் அரசு கட்டுப்பாடு விதிக்கத் தீர்மானித்திருப்பதை எதிர்க்கும் இடதுசாரியினரே முட்டை, கல்வீச்சுக்களை நடத்தினர் என்று கூறப்படுகிறது.

ஜேர்மனில் குடியேறிய வெளிநாட்டவர்கள் மீது தீவிரவலதுசாரிகள் நடத்தி வரும் வன்முறைத் தாக்குதல்களைக் கண்டித்தே ஜேர்மன் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்.

நேற்று இடம்பெற்ற முட்டை, கல்வீச்சுக்களின் போது ஜேர்மன் பிரதமர் ஹெல்மட்கோலும் தாக்குதலுக்கு ஆளானார்.

பொலிஸார் கவசங்களுடன் சென்று அவரையும் ஜேர்மன் ஜனாதிபதியையும் பாதுகாத்து கூட்டம் நடைபெற்ற இடத்தில் இருந்து வெளியேற்றினர்.

இரு தலைவர்களும் காயங்களுக்கு ஆளாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

ஜேர்மனியில் தஞ்சம் கோரும் வெளிநாட்டார் மீது வலதுசாரி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதை ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட ஜேர்மனியர் கண்டிக்க வேண்டும் என்று ஜேர்மன் ஜனாதிபதி ஹொன்சக்கர் கேட்டுக்கொண்டார்.

ஒவ்வொரு மாதமும் வெளிநாட்டவர் சுமார் 50 ஆயிரம் பேர் வரை ஜேர்மனியில் தஞ்சம் கோரி வருகின்றனர் என்று பி. பி. சி. தெரிவித்தது.

இனவாதத்தைக் கண்டிக்கும் பொதுக் கூட்டங்களும் பேரணிகளும் ஜேர்மனின் பல பகுதிகளில் நேற்று இடம் பெற்றன. (உ-எ-3)

---

## மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து மட்டக்களப்புக்கான சகல போக்குவரத்துத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டன.

"நீண்ட நாட்களின் பின்னர் கிழக்கில் மேற்கொள்ளப்படும் இந்த இராணுவ நடவடிக்கையின் போது புதிய உத்தி ஒன்று கையாளப்பட்டிருக்கிறது என்றும்—

நகர மற்றும் கிராமப்புற பகுதிகளின் பாதுகாப்பை பொலிஸாரிடமும், அதிரடிப் படையினரிடமும் ஒப்படைத்துவிட்டு இராணுவத்தினர் காட்டுப்புறத் தாக்குதல்களில் முழு அளவில் ஈடுபட்டிருப்பதாகவும்—

ஏ. எவ். பி. செய்தியாளர் தெரிவித்தார்: சோதனைச் சாவடிகள் மற்றும் காவலரண்களிலும் பொலிஸாரே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனராம்.

பொதுமக்கள் தரப்பில் இழப்புகளைத் தவிர்ப்பதற்காகவும், காடுகளில் இருந்து விடுதலைப் புலிகளை விரட்டுவதற்காகவுமே இத்தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முதல் நாள் தாக்குதலில் உயிரிழந்தோர், காயமடைந்தோர் பற்றிய விபரங்கள் நேற்று இரவு வரை கிடைக்கவில்லை என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன (அ-உ-எ-3-6)

---

## முஸ்லிம்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டதற்கும் புலிகளே காரணம் என்று அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

அரசாங்கம் முஸ்லிம் மக்களைக் காப்பதற்குத் தவறிவிட்டது என்று குற்றஞ் சாட்டும் முஸ்லிம் தலைவர்களைச் சமாளிப்பதற்கும்—

அவர்களது ஆத்திரத்தைத் தணிக்கவுமே மட்டக்களப்பில் இராணுவ நடவடிக்கை என்ற நாடகத்தை அரசு நடத்துகிறது என்றும் அந்த ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன. (உ-ஒ)

---

# கட்சியில் அத்துலத் முதலி சர்வாதிகாரம் செய்கிறார்

## றொனி மனைவி குற்றச்சாட்டு

லலித் அத்துலத் முதலி தமது கட்சியில் சர்வாதிகாரம் செய்கிறார். அவரது சர்வாதிகாரப் போக்கு பிடிக்காத காரணத்தினாலேயே நான் கட்சியிலிருந்து விலகினேன்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து கடந்த வாரம் விலகிய திருமதி மல்லிகா டி மெல் பி. பி. ஸிக்கு இவ்வாறு கூறினார்.

முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெலின் துணைவியாரான மல்லிகா டி மெல் தமது ராஜினாமா குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

லலித் அத்துலத் முதலியால் எனக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டன. ஆனால் ஜனாதிபதி பிரேமதாசவினால் எனக்கோ எனது குடும்பத்தவர்களுக்கோ எவ்வித தொந்தரவும் ஏற்படவில்லை.

—என்றார். (ஒ-6)

# சுயதொழில் புரிவோருக்கு ஓய்வூதியத் திட்டம் அறிமுகம்

சுயதொழில் புரிவோருக்கான ஓய்வூதியத் திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைப் படுத்தப்படவிருப்பதாக உயர் அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

சுயதொழில் புரிவோருக்கும் இது போன்ற தொரு திட்டத்தை நடைமுறைப் படுத்த அரசு கொள்கையளவில் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும்—

இதற்கான சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (த-10)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி. 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 09-11-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org